LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II 2005/2006 (வெளிவாரி)
## (பெப்ரவரி/மார்ச் 2008)

## PS 301 ஒப்பீட்டு அரசியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. ஒப்பீட்டு அரசியல் என்பதனை வரையறை செய்து இது ஒரு கற்கை நெறியாக வளர்ந்த விதத்தினை விபரிக்குக.

2. "ஒப்பீட்டு அரசியலினை விளங்கிக்கொள்வதற்கு அணுகு முறைகள் ஓர் ஊடகமாகும்". இக்கருத்தினை நவீன அணுகு முறைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

3. நவீன அரசுகளில் அரசியல் சமூகமயவாக்கல் நடந்தேறும் விதத்தினை பரிசீலிர்க்குக.

4. அரசியல் நவீனத்துவம் என்ற பதத்தினை தெளிவுபடுத்தி அரசியல் நவீனத்துவத்தினை உருவாக்கும் பிரதான காரணிகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

5. ஒரு நாட்டிலுள்ள சமூகங்களிடையே முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்குத் தீர்வாக சமஷ்டி முறை முன்வைக்கப்படும்போது அச்சமஷ்டி முறையினால் அந்நாடு பிரிவினைக்கு உள்ளாகும் என்ற வாதம் நியாயமானதா? பொருத்தமான உதாரணங்களுடன் உமது கருத்தினை முன் வைக்குக.

6. பாராளுமன்ற அரசாங்கமுறை ஜனாதிபதித்துவ அரசாங்க முறை என்பவற்றின் குறை, நிறைகளை ஒப்பிட்டு ஆராய்க.

7. i. அரசியல் யாப்பு என்பதனை வரையறை செய்க.
   ii. அரசியல் யாப்பு ஒன்று உட்கொண்டிருக்க வேண்டிய பிரதான பண்புகளை சுட்டிக் காட்டி விளக்குக.

8. பின்வருவனவற்றினை விளக்குக.

i. சட்டத்துறை பணிகள்
ii. நிறைவேற்றுத்துறை பணிகள்
iii. நீதித்துறை பணிகள்

9. குறைவிருத்தி நாடுகளின் அரசியல் அபிவிருத்தியில் நவகாலணித்துவம் வகித்துவரும் பங்கினை மதிப்பிடுக.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பெழுதுக.

i. அரசியல் கலாசாரம்
ii. அரசியல் பங்குபற்றல்
iii. அரசியல் அதிகாரம்
iv. அமுக்கக் குழுக்கள்

***********